RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s222316

# சூல் புதினத்தின் சமூகச் சிந்தனைகள்

**தி. தமிழ்ச்செல்வி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா

# Social Thoughts in the Novel Kovaerukaluthaigal

**T. Tamilselvi** [a, *]

[a] Department of Tamil, Erode Arts and Science College (Autonomous), Erode-638009, Tamil Nadu, India

* Corresponding Author: selvipoovizhi23@gmail.com

Received: 19-09-2022
Revised: 17-11-2022
Accepted: 30-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The prediction of the people of Uralaikudi village is a novel that has won five awards on the importance of Uthami Sarada who gave life to Karagattam, the excellence of Uthami Sarada, who gave life to Karagattam, and the virtues of the village of Uralaikudi as a way of improving the merits of the society, as an act of relieving sins, as an act of protecting jewellery, as an act of relieving sins, as an act of protecting the jewellery, as an act of improving the livelihood of the people of Uralikudi village, which is mutually filled, as the akshaya patras of the tanks. It is not the story of a particular family living in the village. Cho Tharman, the author of the novel 'Sool', has given some interesting narratives in realistic style about the purpose of the old and modern times, which have short stories of living in the entire village.

**Keywords:** Uralaikudi, Karagattam, Sool, Uthami Sarada

## முன்னுரை

உருளைக்குடி கிராம மக்களின் கதையாக தொடங்குகிறது சோ. தர்மன் எழுதிய 'சூல்' புதினம். கிராம மக்களின் பல்வேறு வகையான வாழ்க்கைச் சம்பவங்களின் நிகழ்வுகளை சித்தரிக்கும் கதையாக நம்மை கதையுடன் பயணிக்க வைக்கிறது.

## கிராம மக்களின் கணிப்பு

கிராமத்தில் பனை மரங்களில் ஆண்மரம், பெண் மரம் என கண்டறிவது, அதில் தூக்கணாங்குருவிகள் கூடு கட்டும் முறை, அதை வைத்து இந்த வருடம் வடகிழக்கு பருவமழை வருமா? இல்லைதென்கிழக்கு பருவ மழை வருமா? என்று கணிப்பது, கண்மாய்களின் ஓரங்களில் வளர்ந்து நிற்கும் நாட்டுக் கருவேல மரங்களில் எவ்வளவு உயரத்தில் கூடு கட்டுகிறதோ அந்த அளவிற்கு தான் மழை பெய்யும் என்று அவர்கள் கணித்து சொல்வது என பல சின்னச்சின்ன நிகழ்வுகள் மூலம் கிராம மக்களின் பேரறிவு அவர்கள் மொழியிலேயே நமக்கு அறிவுறுத்துகிறது இந்த நாவல்.

## தொலைந்து போன நிகழ்வுகள்

கிராமத்தில் ஒரு கதையைப் பற்றியோ அல்லது ஒரு கதாபாத்திரத்தை பற்றியோ, கருத்தையோ குறிப்பிடவில்லை. ஒட்டுமொத்த கிராம மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளை பற்றியும் அவர்களின் நற்பண்புகள் கிராமத்தின் மொழியிலேயே நாம் உணர முடிகிறது.

## கண்மாய்களே அட்சயப்பாத்திரங்கள்

'நீரின்றி அமையாது உலகு'இந்த உலகம் இயங்க உயிரினங்கள் வாழ இன்றியமையாதது நீர். ஒவ்வொரு நாளும் மழை பெய்து நம் வீட்டுப் பானைகள் நிரம்புவதில்லை. வருடம் தோறும் பருவத்தில் பெய்த மழையை பாதுகாத்து விவசாயம் உள்ளிட்ட அனைத்து தேவைகளுக்கும் நாம் அதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திற்கும் அப்படி நீரை சேமிக்க இருக்கும் கணமாய்களே அட்சயப் பாத்திரங்கள். அந்த அட்சயப் பாத்திரத்தில் நீர் குறையாமல் இருந்தால்தான் அந்த கிராமமும் அதனைச் சார்ந்த உயிர்களும் வாழ முடியும்.ஒரு முழு கிராமத்தின் மொத்த உயிர்களையும் தன்னுள்ளே தாங்கி ததும்பி நிற்கும் கண்மாய்களே நிறைசூழியான தாய்க்கு ஒப்பிட்டு இந்த நாவலுக்கு 'சூல்'என்று பெயர் சூட்டியுள்ளார் சோ.தர்மன் (Dharman, 2016).

## பரஸ்பரம் இல்லாத நிலை

உருளைக்குடி கிராமத்தில் பலதரப்பட்ட சாதி இன மக்கள் வாழ்ந்தாலும் எந்தவித பிரச்சனையோ, பாகுபாடோ இல்லாமல் வாழ்ந்து தங்கள் தொழில்களை செவ்வனே சிறப்பாக செய்து வந்தார்கள். கலப்பை செய்ய ஆசாரி, விவசாயம் செய்ய சம்சாரிகள், பெரிய அளவு விவசாய நிலங்களை வைத்திருக்கும் ரெட்டியார்கள், நாயக்கர்கள், கள்ளுக்கடை நடத்தும் தேவர், சக்கிலியர்கள் செருப்பு தைப்பவர்கள், வியாபாரம் செய்யும் நாடார், நீர்ப்பாய்ச்சியாக பள்ளர்களின் வம்சாவளியினர், சரியாக சோசியம் சொல்லும் ஐயர், வெற்றிலை விளைய வைக்கும் பிள்ளை என கிட்டத்தட்ட அத்தனை ஜாதியும் அந்த கிராமத்தைச் சுற்றியும் உள்ள கிராமங்களில் வாழ்ந்தாலும் ஒரிருவர் பிரச்சினைக்குரியவர்களாக இருந்தாலும் மற்ற அனைத்து மக்களும் பரஸ்பர உண்மையோடு உணர்வோடு வாழ்ந்து வந்தார்கள்.

## மீன்பிடித் திருவிழா நிகழ்வு

ஒவ்வொரு வருடமும் கண்மாயில் நீர் வற்றி சுருங்கும் போதும் அழிமீன் பிடிப்பதற்காக ஊர் மக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். சாதி மத பேத இல்லாமல் அனைத்து மக்களும் கண்மாயில் இறங்கி மீன்களை அள்ளிக்கொண்டு தங்கள் வீட்டுக்குச் செல்கிறார்கள். நாவலில் நடைபெறும் இந்நிகழ்வானது மதுரை, திருநெல்வேலி, தர்மபுரி போன்ற மாவட்டங்களில் இன்னும் நடைபெறுகிறது. அந்த மீன்கள் எல்லாம் பிடித்து முடித்து கண்மாயில் தண்ணீர் முழுவதும் வற்றிய பின் அந்த ஊரில் உள்ளவர்களே கூடி கன்மாயைத் தூர்வாரி அவரவர் தோட்டங்களிலும், வயல்களிலும் அந்த மண்ணைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

## கொப்புளாயின் நற்பண்புகள்

பிள்ளை இல்லாத கொப்புளாயி தன் தங்கையை கணவனுக்கு கட்டி வைத்துவிட்டு, எருமை மாடுகளை மேய்த்து வாழந்து வருகிறார். அந்த ஊர் வழியே போகும் பாதயாத்திரை பக்தர்களுக்கு இலவச மோர் தருகிறார். அந்த ஊர் மக்களுக்கு உண்மையிலேயே பணம் என்றால் என்னவென்றே தெரியாது. இந்த கொப்புளாயி ஒருவனை வளர்க்கிறாள். அவன் அவ்வப்போது கோபித்துக் கொண்டு வெளியூர் சென்று விடுகிறான். 'இப்படி வெளியூருக்கு ஓடிப்போறியே சோத்துக்கு என்னடா பண்ணுவ' என்று கொப்புளாகி கேட்க, வேலை செய்து பணம் சம்பாதித்து ஹோட்டலில் பணம் கொடுத்து சாப்பிடுவேன் என்பான்.

அவன் செய்வதை நம்ப முடியாமல் தாங்கிக் கொள்ளவும் முடியாமல் போவோர் வருவோரிடமெல்லாம் இங்க பாரு டவன்ல போய் சோத்த காசுக்கு விப்பாங்களாம். இதெல்லாம் நியாயமா? யாராவது சோத்த காசுக்கு விப்பாங்களா? என்று புலம்பும்போது அவனை கிராமத்தான் ஒன்றும் தெரியாதவள் என்று சொல்வதா? இல்லை சாப்பாடு என்பதை பணத்திற்கு விற்கக்கூடாது

இருந்தால் இல்லாதவருக்கு இலவசமாகத் தான் தர வேண்டும் என்ற உயர்ந்த பண்பை பாராட்டுவதா? சிந்தித்துப் பார்த்தால் பணத்தின் பின் ஓடும் இப்போதைய இந்த வாழ்க்கையில் இப்படிப் பல நற்பண்புகளை இழந்து விட்டு அனைத்தும் பணமாகப் பார்க்கும் ஒரு சமூகமாகத்தான் நாம் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

## பாவ விமோட்சனம் அடையும் நிலை

எட்டயபுர அரண்மனையில் வேலை செய்யும் சக்கிலியர் மற்றும் பட்டினத்தில் இருந்து ஊர் வந்த ரெட்டியார் மாமிசத்துக்கு ஆசைப்பட்டு ஆடு, மாடுகளை பிடித்து கொலை செய்து அரண்மனையில் பிடிக்கப்படுகிறார்கள். ராஜா அவரை விட்டாலும் அவர் செய்த பாவம் விடாமல் துரத்துகிறது. கொப்புளாயின் அறிவுறுத்தலால் ஐயரைப் பார்த்து பாவ விமோட்சனம் அடைவது மற்றும் ஊருக்குள் ஏற்படும் பிரச்சனைகள் கடைசியாக எப்படி தீர்வது பற்றிய கருத்தாக அமைகிறது.

## நகை பாதுகாக்கும் செயல்

இக்கதையின் கதாபாத்திரமான பனையேறி எலியன் மற்றும் பிச்சை ஆசாரி இருவரும் வெள்ளைக்காரனிடம் இருந்து தப்பிவரும் கட்டபொம்மனுக்கு உதவி செய்கிறார்கள். சில நாட்களில் கட்டபொம்மனிடமிருந்து தங்க நகைகள் பரிசாக கிடைக்கிறது. இருவரும் வசிப்பது எட்டயபுரம் அரண்மனையில் நகைகளை போட்டாலோ, விற்றாலோ எட்டயபுரம் அரசரிடம் மாட்டிக் கொள்வார்கள். அரண்மனைக்குத் தெரிந்தால் மரணம் தான். ஆனால் அவர்கள் புதையல் போல் புதைத்து வைக்கிறார்கள். வீரபாண்டிய கட்டபொம்மனோ வெள்ளையரிடம் சிக்கி தூக்கில் ஏறிய பின்னும் அவர்களால் புதையலை வெளியே எடுக்க முடியவில்லை. காத்திருந்து தலைமுறைகள் பல கடந்தும் ஓடுகின்றன. கட்டபொம்மன் எந்த பரிசும்கொடுக்காமல் இருந்தால் பரவாயில்லை. மடியில் கனம் ஏறிய பின் அவர்கள் நிம்மதி குறைகிறது. நகையை பாதுகாக்க அவர்கள் படும் துன்பம் நகைச்சுவை ஓட்டத்துடன் காண முடிகிறது (Dharman, 2016).

## கிராமத்தின் சிறப்பு

தூத்துக்குடி மாவட்ட சரித்திரத்தில் இடம்பெற்ற ஊர்களில் முக்கியமான ஊர் உருளைக்குடி. கட்டாயம் பார்க்க வேண்டிய ஊரும் கூட. ஊருக்குள் நுழைந்த உடனேயே பஞ்சாயத்து தலைவர் மூக்கா அவர்கள் அனைவரையும் வரவேற்கும் போர்டு கண்ணில் படும். அடுத்து பிரமாண்டமான கலை வேலைபாடுகளுடன் கூடிய ஒரு பெரிய அலங்கார வளைவு உங்களை வரவேற்கும். அடுத்து முன்னால் இரு பக்க தூண்களிலும் இரண்டு நரிவாள்கள் தொங்குவதை பார்க்கலாம். ஊரின் முன்னால் போரில் எழுதப்பட்டுள்ள வாசகங்களை படித்து முடித்த பின்னர் தான் ஊருக்குள் நுழைய முடியும்.

'நரி வேட்டையர்கள் வாழ்ந்த ஊர் இவ்வூர். சங்க இலக்கியங்களிலே நரி வேட்டை பற்றியும், நரி வேட்டையின் கடுமை பற்றியும், அதில் வெற்றி பெற்றவர்கள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. அந்த வரிசையில் நரி வேட்டையில் இவ்வூர் சிறந்து விளங்கியது என்பதற்கும் நரி வீட்டில் புகழ்பெற்ற வீரத் தமிழர்கள் இவ்வூரில் வாழ்ந்தார்கள் என்பதற்கும் இதோ உங்கள் முன்னால் தொங்கும் நரியின் வால்களே சாட்சி.'

கரிசல்காடுகளிலே

கன்னி நாய் வம்சம் கொண்டு

நரிகளை வேட்டையாடிய

வீரர்கள் வாழ்ந்த ஊர் இவ்வூர்.

- மூக்கா, தலைவர் உருளைக்குடி பஞ்சாயத்து.

அடுத்ததாக தெரிகிறதே ஒரு சிலை. அதன் கீழ் உள்ள வாசகத்தையும் படித்துப் பாருங்கள்.

கலைகளின் காவலன்

கரகாட்டத்தை மீட்டெடுத்து

உயிர் கொடுத்த உத்தமன்

சின்னாத்துரை.

அடுத்த சிலையை நீங்கள் அவசியம் பார்க்க வேண்டும். ஏனென்றால் அது ஒரு பெண் சிலை.

நாட்டியத்தாரகை

கரகாட்டத்திற்கு உயிர்

கொடுத்த உத்தமி

கற்புக்கரசி கலைமாமணி

தச்சநல்லூர் சாரதா.

இது போன்ற பல சிறப்பம்சங்களை பெற்று விளங்கும் உருளைக்குடி கிராமத்தின் சிறப்பினை தனக்கே உரிய சொல்நடையின் மூலம் உணர்த்தியுள்ளார் சோ தர்மன் (Dharman, 2016).

## முடிவுரை

உருளைக்குடி கிராமத்தின் மக்களின் கணிப்பு, கண்மாய்களின் அட்சயபாத்திரங்களாக வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகவும், பரஸ்பரம் நிறைந்ததாகவும், கொப்புளாயின் நற்பண்புகளை பற்றியும், பாவ விமோசனத்தை தீர்க்கும் விதமாகவும், நகையை பாதுகாக்கும் செயலாகவும், நரிக்குறவ மக்களின் வாழ்வாதாரத்தின் சிறப்பு, கரகாட்டத்திற்கு உயிர் கொடுத்த உத்தமி சாரதாவின் சிறப்புகளை பற்றியும், சமூகத்தின் சிறப்புகளை மேம்படுத்துவதாக உருளைக்குடி கிராம சிறப்பை பற்றி ஐந்து விருதுகளை வென்ற நாவல் சோ தர்மனின் 'சூழ்' புதினம்.

## References

Dharman, S. (2016) Sool, Adayalam Publication, Trichy, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License